இப்போதெல்லாம் எனக்கு வீட்டினுள் பலர் உலாவுவதாகத் தோன்ற ஆரம்பித்திருக்கிறது. கடந்த வருடங்களில் இல்லாத எதுவோ ஒன்று பிடித்து ஆட்டிவிக்கத் துவங்கியதன் அறிகுறியாக இருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது. மகளிடம் சொல்லலாம்தான். அவள் என்ன பதிலுரைப்பாள் என்பதையும் கூடவே ஊகிக்கத் துவங்கிவிடுகிறது மனம். பதின்மங்களில் இருக்கும் மகளிடம் என்ன சொன்னாலும், அது தலைமுறை இடைவெளியால் கேலிக்கு ஆளாகுமென அறிந்ததுதானெனத் தன்னைத்தானே தேற்றிக்கொள்வதும் வழக்கமானதாகிப்போனது. வீட்டிலிருந்தே பணி செய்யும் உத்தரவு அலுவலகத்திலிருந்து வந்தது முதல் சில வருடங்களாக வீட்டில் பணி செய்யும் நிலை வந்தது அனைவரையும் போல வரமென நினைத்திருந்தேன்.